# மன்முனை தென் மேற்கு பிரதேச சபை
# மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மிளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 19 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 18 ஆந் திகதி கணக்காய்விற்காக சமரப்பிக்கப்ட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மண்முனை தென் மேற்குப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மண்முனை தென் மேற்குப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணங்காமைகள்

கீழே காட்டப்பட்டுள்ள விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டன.

| சுட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 2.14.1 | ஐந்து மூடிய கேள்விகள் இன்றி ஒரு வியாபார நிலையத்தின் நிர்மாண வேலைக்காக ரூபா 94,959 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிகள் அதிகாரச் சட்டம் | ஊதியங்களிலிருந்து ரூபா 300 தொகையான முத்திரைக் கட்டணம் கழிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 12/2000(3) | சுற்றுநிருபத்திற்கு முரணாக ஒரு கணனி பயிலுனருக்கு மாதாந்த கொடுப்பனவாக ரூபா 18,450 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 159,097 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 14,890,278 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | - | - | - | 50 | 50 | - |
| (ii) | குத்தகை வாடகைகள் | 104 | 104 | - | 142 | 142 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 162 | 162 | - | 819 | 819 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 1,757 | 1,757 | - | 3,466 | 3,466 | - |

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 7,727 | 6,222 | 1,505 | 5,287 | 5,981 | (694) |
| ஏனையவை | 6,519 | 5,294 | 1,225 | 1,458 | 20,194 | (18,736) |
| உப மொத்தம் | 14,246 | 11,516 | 2,730 | 6,745 | 26,175 | (19,430) |
| மூலதனச் செலவினம் | 34,338 | 12,391 | 21,947 | 1,700 | 4,491 | (2,791) |
| முழு மொத்தம் | 48,584 | 23,907 | 24,677 | 8,445 | 30,666 | (22,221) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| புதவியினா் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
| பதவிநிலைத் தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 10 | 09 |
| ஆரம்பத் தரங்கள் | 06 | 06 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 15 |
| | 17 | 31 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வுகள் / கணிப்பீட்டுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 23,635,075 ஆகும்.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) வருமான நிர்வாகம்